**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன்– மாற்றுத் திறனாளிகளுக்கான நலத் துறையால் செயல்படுத்தப்படும் பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டங்களின் கீழ் பயனாளிகளுக்கு வழங்கப்படும் பராமரிப்பு உதவித் தொகை ரூ.500/–ஐ ரூ.1000/– ஆக உயர்த்துதல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.22 நாள்: 24–06–2011
ஆனி 9, திருவள்ளுவர் ஆண்டு 2042
படிக்க:

1. அரசாணை(ப) எண்.160, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள்11–09–2006.
2. அரசாணை(நிலை) எண்.154, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள்05–09–2007
3. அரசாணை(நிலை) எண்.47 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள்22–05–2008.
4. அரசாணை(நிலை) எண்.41, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட(சந 6.1)த் துறை, நாள் 17–05–2011.

மீண்டும் படிக்க:

5. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண்.3822/மா.தி.ந.2.1/2011, நாள் 27– 05–2011.

–––––––

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மிகவும் கடுமையான ஊனத்தால் பாதிக்கப்பட்டு வேறு எந்த வகையிலும் மறுவாழ்வு பெறமுடியாத கடும் ஊனமுற்ற நபர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பராமரிப்பு உதவித் தொகை 01–09–2006 முதல் ரூ.200/–லிருந்து ரூ.500/–ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் 60 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் மனவளர்ச்சி குன்றியவர்கள் தங்களை தாங்களே பராமரித்துக் கொள்ள இயலாது என்னும் அடிப்படையில் 60 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் மனவளர்ச்சி குன்றியோரின் வாழ்வாதாரத்திற்கு வழி வகுக்கும் வகையில் வருமான வரம்பை கருத்தில் கொள்ளாமல் எண்ணிக்கை வரையறையின்றி கடும் ஊனமுற்றோருக்கு 01–09–2007 முதல் மாதம் ஒன்றிற்கு ரூ.500/– பராமரிப்பு உதவித் தொகை வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனவளர்ச்சி குன்றியோருக்கு / கடும் ஊனமுற்றோருக்கு அளிக்கப்படுவது போல மாதாந்திர உதவித் தொகையாக ரூ.500/– வீதம் 1000 நபர்களுக்கு வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2011 சட்டமன்ற தேர்தல் அறிக்கையில் ''முதியோர், உடல் ஊனமுற்றோர், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் கைம்பெண்களுக்கு மாத உதவித் தொகை

ரூ.1000/—ஆக வழங்கப்படும்'' என்று அறிவித்துள்ளதை தொடர்ந்து சமூகநலத் துறையால் செயல்படுத்தப்படும் இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத்திட்டம், இந்திரா காந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம், இந்திரா காந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம், ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்ற மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம், கணவனால் கைவிடப்பட்ட/ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் 50 வயது எய்தியும் வாய்ப்பு வசதியில்லாததால், திருமணமாகாமல் இருக்கும் உழைக்கும் திறனற்ற, ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டு வரும் மாதாந்திர உதவித் தொகை ரூ.500/—லிருந்து ரூ.1000/—ஆக உயர்த்தப்பட்டு, இதனை மே, 2011 முதல் நடைமுறைப்படுத்தவும் மேலே 4—ல் காணும் அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் பின்வரும் மூன்று திட்டங்களில் பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

i. கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 11,269 நபர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

ii. தங்களை தாங்களே பராமரித்துக் கொள்ள இயலாத 60 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் மனவளர்ச்சி குன்றியோருக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 64,138 நபர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

iii. தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 1000 நபர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

4. சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையில் ஓய்வூதியம் உயர்த்தி வழங்கப்படுவது போன்று மேற்காணும் மூன்று திட்டங்களுக்கும் பராமரிப்பு உதவித் தொகையை 2011, மே மாதம் முதல் ரூ.500/—லிருந்து ரூ.1000/— ஆக உயர்த்தி வழங்க பின்வருமாறு செலவினம் ஏற்படும் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்.

**i) கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம்**

| | |
|---|---|
| 11,269 நபர்கள் x ரூ.1000/— x 11 மாதங்கள்<br>(2011, மே மாதம் முதல் 2012 மார்ச் மாதம் வரை)<br><br>11,269 நபர்கள் x ரூ.500/— x 1 மாதம் | ரூ.12,39,59,000/—<br><br><br>ரூ. 56,34,500/— |
| **மொத்தம்** | **ரூ.12,95,93,500/—** |
| பணவிடை அஞ்சல் செலவினம்<br>11,269 நபர்கள் x ரூ.50.25 x 11 மாதங்கள்<br>11,269 நபர்கள் x ரூ.25.25 x 1 மாதம் | <br>ரூ.62,28,940/—<br>ரூ. 2,84,542/— |
| **மொத்தம்** | **ரூ.65,13,482/—** |
| **பெரு மொத்தம்<br>(ரூ.12,95,93,500/— + ரூ.65,13,482/—)** | **ரூ.13,61,06,982/—** |

ii) மன வளர்ச்சி குன்றியோருக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம்

| | |
|---|---|
| **64138** நபர்கள் x ரூ.**1000/–** x **11** மாதங்கள்<br>**64138** நபர்கள் x ரூ.**500/–** x **1** மாதம் | ரூ.**70,55,18,000/–**<br>ரூ. **3,20,69,000/–** |
| **மொத்தம்** | **ரூ.73,75,87,000/–** |
| பணவிடை அஞ்சல் செலவினம்<br>**64138** நபர்கள் x ரூ.**50.25** x **11** மாதங்கள்<br>**64138** நபர்கள் x ரூ.**25.25** x **1** மாதம் | ரூ.**3,54,52,280/–**<br>ரூ. **16,19,485/–** |
| **மொத்தம்** | **ரூ.3,70,71,765/–** |
| **பெரு மொத்தம்**<br>**(ரூ.73,75,87,000/– + ரூ.3,70,71,765/–)** | **ரூ.77,46,58,765/–** |

**iii) தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம்**

| | |
|---|---|
| **1000** நபர்கள் x ரூ.**1000/–** x **11** மாதங்கள்<br>**1000** நபர்கள் x ரூ.**500/–** x **1** மாதம் | ரூ.**1,10,00,000/–**<br>ரூ. **5,00,000 /–** |
| **மொத்தம்** | **ரூ.1,15,00,000/–** |
| பணவிடை அஞ்சல் செலவினம்<br>**1000** நபர்கள் x ரூ.**50.25** x **11** மாதங்கள்<br>**1000** நபர்கள் x ரூ.**25.25** x **1** மாதம் | ரூ.**5,52,750/–**<br>ரூ. **25,250/–** |
| **மொத்தம்** | **ரூ.5,78,000/–** |
| **பெரு மொத்தம்**<br>**(ரூ.1,15,00,000/– + ரூ.5,78,000/–)** | **ரூ.1,20,78,000/–** |

(ரூ.13,61,06,982/– +ரூ.77,46,58,765/– + ரூ.1,20,78,000/– = ரூ.92,28,43,747/–)

**5.** மேலும், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையை போன்று உதவித் தொகையை ரூ.**500/–** லிருந்து ரூ.**1000/–** ஆக **2011**, மே மாதம் முதல் உயர்த்துவதால் அரசிற்கு மொத்த செலவினம் ரூ.**92,28,43,747/–** ஏற்படும் என்றும், அதில் **2011–2012** ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.**45,82,78,000/–** போக ரூ.**46,45,67,747/–** கூடுதல் செலவினத்திற்கு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கோரியுள்ளார்.

**6.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **2011** ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் வண்ணம் பத்தி **3**–ல் குறிப்பிடப்பட்டுள்ள உதவித் தொகை வழங்கும் திட்டங்களின் கீழ் பயன்பெறும் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டோரின் பராமரிப்பு மற்றும் மருத்துவச் செலவினையும் கருத்தில் கொண்டு அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர உதவித்தொகையினை **2011**, மே மாதம் முதல் (ஜூன் **2011**–ல் வழங்குவதற்கு) ரூ.**500/–**லிருந்து ரூ.**1000/–**(ரூபாய் ஆயிரம் மட்டும்)ஆக உயர்த்தி ஆணை வழங்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

7. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்து அதன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளவாறு மாற்றுத் திறனாளிகள் நலத் துறையால் செயல்படுத்தப்படும் மேலே பத்தி 3–ல் தெரிவிக்கப்பட்டுள்ள நலத் திட்டங்களின் கீழ் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகை ரூ.500/–லிருந்து ரூ.1000/–(ரூபாய் ஆயிரம் மட்டும்) ஆக உயர்த்தி வழங்கவும் மற்றும் இதனை 2011, மே மாதம் முதல் நடைமுறைப்படுத்தவும் (ஜூன் 2011ல் வழங்குவதற்கு) முடிவு செய்து இச்செலவித்திற்கென 2011–12 ஆம் நிதியாண்டிற்கு ரூ.92,28,43,747/– (ரூபாய் தொண்ணூற்று இரண்டு கோடியே இருபத்து எட்டு இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து எழுநூற்று நாற்பத்து ஏழு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

8. மேலே பத்தி 7–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை பெற்று வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

9. மேலே பத்தி 7–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| i | **கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் மற்றும் 60% மற்றும் அதற்கு மேல் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை** | |
| | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன் –I திட்டத்தில் சேராதது– CD கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான பராமரிப்பு படிகள்– | |
| | 05 அலுவலகச் செலவுகள்–04 அலுவலகப் பணி அஞ்சல் வில்லைகள் மற்றும் தபால் செலவு (து.தொ.கு.2235–02–101–CD–0545) | ரூ.4,35,85,247/– |
| | 09 உதவித் தொகை 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (து.தொ.கு.2235–02–101–CD–0938) | ரூ.86,71,80,500/– |
| ii | **தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை** | |
| | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன்– 101 மாற்றுத் திறனாளிகள் நலன்–பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம்–MI தசைக் கோளாறு நோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்குப் பராமரிப்பு மானியங்கள் | |
| | 05 அலுவலகச் செலவுகள்–04 அலுவலகப் பணி அஞ்சல் வில்லைகள் மற்றும் தபால் செலவு (து.தொ.கு.2235–02–101–MI–0545) | ரூ.5,78,000/– |
| | 09 உதவித் தொகை 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (து.தொ.கு.2235–02–101–MI–0938) | ரூ.1,15,00,000/– |
| | | ரூ.92,28,43,747/– |

**10.** மேலே பத்தி 7–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்காக இடைக்கால வரவு–செலவுத் திட்டம் **2011–2012** ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்கு மேலாக தேவையான கூடுதல் செலவினம் ரூ.**46,45,58,747/–** ஒரு "புது துணைப் பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொ–I) துறையில் பிறப்பிக்கப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் பெற தேவையான விண்ணப்பத்தை இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.வெ.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை **2011–12** ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தேவையான கருத்துருவை உரிய நேரத்தில் நிதி (சந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**11.** இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா. எண் நிதி(சந)/**215**/JS(VSPM)/2011, நாள் **23–06–2011**–ல் பெறப்பட்ட ஒப்புதலின்படி வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.**155** (நூற்று ஐம்பத்தைந்து)

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–**6**.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக).
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள்.
தலைமை மாநில கணக்காயர், சென்னை–**18** (பெயரில்)
அனைத்து சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் அனைத்து பிரிவுகள்
செயலரின் தனிச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–**9**.

**நகல்:-**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–**9**.
மாண்புமிகு அமைச்சர் (நிதி ) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–**9**.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் ) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–**9**.
நிதி(சமூக நலம்/வ.செ.பொது–I / II)த் துறை, சென்னை–**9**.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.